**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 105/2022**

பி.வா.சா.2 – அழகிச்சி 05.02.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

சர்வே நம்பர் 520/4 ன் வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் எனது அப்பா பெயரில் இருந்தது என்றால் சரிதான். சர்வே நம்பர் 520/4ல் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கருப்புச்சாமி என்பவர் தான் குணசேகரன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என்னுடைய ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி கருப்புச்சாமியின் ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் கொடுத்திருப்பார். பி.வா.சா.ஆ.26 ஆவணத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல எனது அண்ணன் சொத்தை விற்றுள்ளார் எனக்கு வேறு இடத்தில் சொத்து கொடுத்துள்ளார். நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து வாதிகளுக்கு எதிராக பி.வா.சா.ஆ.26 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**